**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.701/2023 |
| Deposition of witness for Prosecution | : | P.W–1 |
| Name | : | வெள்ளைச்சாமி, வயது 60 |
| Father Name/Husband Name | : | பெருமாள்சாமி |
| Village | : | செவல்பட்டி |
| Taluk | : | சிவகாசி |
| Calling | : | சமையல் மாஸ்டர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of February 2024.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது செவல்பட்டியில் வசித்து சமையல் மாஸ்டராக வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த தர்மராஜ் என்பவர் எனது தம்பி மகன். வழக்கின் எதிரியை பார்த்தால் அடையாளம் தெரியும் அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. கடந்த 30.04.2023 ஆம் தேதி நானும் இறந்த தர்மராஜீம் இச்சக்கர வாகனத்தில் மந்திதோப்பிற்கு சடங்கு வீட்டிற்கு சென்றுவிட்டு செவல்பட்டிக்கு வந்து கொண்டிருந்தோம்.
2. கிழவிப்பட்டி பஸ் ஸ்டாப் தாண்டிய உடன் டேங் கவரில் இருந்த பை கீழே விழுந்து எதிர்திசைக்கு சென்றுவிட்டது. அந்த பையை எடுக்க சென்ற போது டம் என்று சத்தம் கேட்டது. நான் பார்த்த போது வேன் மோதி பை மேலாக சென்றது. அப்போது தான் தர்மராஜ் அடிப்பட்டது தெரிந்தது.
3. அருகில் இருந்தவர்கள் வந்துவிட்டார்கள். நான் பார்க்கும் போது அவருக்கு மூக்கிலும் காதிலும் இரத்தம் வந்தது. அங்கிருந்த நபர் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தார்கள். ஆனால் தனியார் ஆம்புலன்ஸ் அங்கே வந்தது. அதில் தர்மராஜை ஏற்றி கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள்.
4. பின்னர் நான் நாலாட்டின்புதூர் காவல்நிலையத்திற்கு என்னை அழைத்துச்சென்றார்கள் நான் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். வழக்கு பற்றி

போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. உங்களுக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் கையெழுத்து போடுவேன் பேப்பர் படிப்பேன், நிறைய எழுத தெரியாது. கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் தர்மராஜீடன் நீங்களும் போனீர்கள் என்றால் ஆம்புலன்ஸ் வருவதற்குள் என்னை காவல்நிலையம் கூட்டிச்சென்றார்கள்.
2. உங்களை கூட்டிச்சென்றது போலிஸ் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் போலிசார் தர்மராஜ் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றால் என் தம்பிமார்கள் சொன்னார்கள். தகவல் சொன்ன தம்பி பெயர் என்ன என்றால் பரமசிவம். பரமசிவம் இறந்த தர்மராஜிற்கு அப்பா என்றால் இல்லை சித்தப்பா.
3. காவல்நிலையம் போன பின்னர் புகாரை போலிசார் தான் எழுதினார் என்றால் இல்லை மச்சினர் எழுதினார். போலிசாருடன் தான் போனீர்கள் என்றால் ஆம் என் தம்பி, மச்சினர் அனைவரும் வந்திருந்தார்கள். நீங்கள் போன எவ்வளவு நேரத்தில் வந்தார்கள் என்றால் நான் போன கொஞ்ச நேரத்தில் வந்ததார்கள்.
4. என்ன காரணத்திற்காக உங்கள் உறவினர்கள் மருத்துவமனைக்கு செல்லாமல் உங்களைத்தேடி காவல்நிலையம் வந்தார்கள் என்றால் என்னை காரில் கூட்டிச் சென்ற போது அவர்களும் அடுத்தடுத்து பின்னாடியே வந்தார்கள். நீங்கள் ஸ்டேஷன் போகும் போது வேன் டிரைவர் ஏற்கனவே அங்கிருந்தார் என்றால் ஆம்.
5. வேன் டிரைவர் தன்னுடைய வாகனத்தில் சென்ற போது ஒரு நபர் குறுக்கே வந்துவிட்டதாக புகார் கொடுத்திருந்தார் என்றாலும் அதற்கும் உங்களிடமும் புகாா எழுதி வாங்கினார்கள் என்றாலும் சரிதான். போலிசார் உங்களையும் வேன் டிரைவரையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.
6. உங்கள் தரப்பில் ஆள் இறந்துவிட்டதால் உங்கள் புகாரின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து தான் போலிசார் வேன் டிரைவரின் பெயர், விவரம் கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். புகார் எழுதியவர் பெயர் என்ன என்றால் ராஜீகுமார், அவர் அதில் கையொப்பம் செய்தாரா என்றால் நான் தான் கையொப்பம் செய்தேன்.
7. புகார் போலிசாரால் எழுதப்பட்டு நீங்கள் கையொப்பம் செய்தீர்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரின் முதல் தாளை போலிசார் மாற்றி எழுதினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த புகாரில் காவல்நிலையத்தில் உங்கள் மகன் அஜாகிரதையாக குடிபோதையில் குறுக்கே கடந்தார்

என்றும் அப்போது இனம் தெரியாத வண்டியில் அடிப்பட்டு கீழே விழுந்ததாக நீங்கள் சொன்னீர்கள் என்றால் அப்படி எதுவும் நான் சொல்லவில்லை.

8. சடங்கு வீட்டிற்கான பங்ஷன் மாலை நேர பங்ஷன் என்றால் மதிய பங்ஷன் நான் மாலை சென்றேன். இறந்த நபருக்கு குடியிருப்பு தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி. மாப்பிள்ளையூரணி என்பது தூத்துக்குடிக்கு முன்னர் உள்ள மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். மாப்பிள்ளையூரணியில் இருந்து வருவதாக இருந்தால் கோவில்பட்டி மாநில நெடுஞ்சாலை வழியாக தான் வருவார்கள் என்றால்ச ரிதான்.
9. வரும் போது அவர் மெயின் ரோட்டில் தான் வந்தார் என்றால் சரிதான். இறந்த நபருக்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது இறந்த நபர் மது அருந்தியிருந்தார் என்றால் இல்லை. அவரை நீங்கள் செவல்பட்டிக்கு வா என்று நீங்கள் வற்புறுத்தவில்லை என்றால் நான் கூப்பிட்டேன்.
10. இறந்த நபர் ஓட்டிய வண்டி ரேஸ் மாடல் வண்டி என்றால் மாடல் பற்றி தெரியாது ஆனால் பெரிய வண்டி. நீங்கள் போன பங்ஷன் என்பது உடனே கிளம்பக்கூடிய பங்ஷன் என்றால் சரிதான். பை என்று சொல்லியுள்ள நிலையில் தர்மராஜின் பையா என்றால் இல்லை என் பை, அதில் என்ன இருந்தது என்றால் இரண்டு செட் துணிகள் இருந்தன.
11. சம்பவ இடம் இரண்டு பஸ்கள் ஒரே சமயத்தில் செல்லக்கூடிய அகலமான ரோடு என்றால் சரிதான். அந்த பையை நீங்கள் தான் கையில் வைத்திருந்தீர்கள் என்றால் இல்லை வண்டி டேங்கில் வைத்திருந்தார். சம்பவ காலம் காத்தடி காலம் இல்லை என்றால் சரிதான். சம்பவ நேரம் இருட்டாக இருந்தது என்றால் இல்லை வெளிச்சமாக இருந்தது.
12. அந்த பையில் கனமான பொருட்கள் இல்லை என்றால் இரண்டு சாரம் ஒரு சட்டை இருந்தது. அந்த பை தர்மராஜின் கையின் இடுக்கின் வழியாக கீழே விழுந்தது என்றால் சரிதான். அந்த பை உருண்டு ரோட்டிற்கு அந்த பக்கம் போகவேண்டிய அவசிம் இல்லை என்றால் அந்த சைடு போய்விட்டது பை கீழே விழுந்த உடன் சுமோ வந்தததது அந்த காற்றி மறு பக்கம் போய்விட்டது.
13. போலிசார் விசாரித்த போது டம் என்று சத்தம் கேட்டு திரும்பி பார்த்த போது உங்கள் மகன் அடிப்பட்டு கிடந்ததாக நீங்கள் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். அதனால் அவர் ரோட்டில் வாகனங்கள் வருகிறதா என்று சரிபார்த்து பையை எடுத்தாரா என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.
14. போலிசார் விசாரணையின் போது அந்த பையில் இரண்டு துணிகள்

இருந்ததாகவும் சுமோவின் காற்றில் அந்த பக்கம் போய்விழுந்ததாக சொல்லியுள்ளீர்களா என்றால் பை விழுந்ததாக தான் சொன்னேன். கீழே விழுந்த பேக் ஜிப் உள்ள பையா என்றால் இல்லை மஞ்சபை. மோதிய வாகனத்தில் எத்தனை நபர்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

15. சம்பவத்திற்கு பிறகு இருச்சக்கர வாகனத்தை அங்கேயே விட்டுவந்தீர்களா என்றால் பசங்கள் எடுத்துவந்தார்கள். சம்பவத்தன்று உங்கள் மகன் தான் மதுபோதையில் அஜாகிரதையாக ரோட்டை கடந்தார் என்றால் அது பற்றி தெரியாது. தற்சமயம் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பை கீழே விழுந்ததாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

16. சம்பவத்தன்று நீங்களும் தர்மராஜீம் மட்டும் தான் அந்த வழியாக சென்றதாக போலிசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் பின்னால் எங்கள் ஆளுங்க வந்ததாக சொன்னேன். சம்பவத்தன்று உங்கள் மகன் மதுபோதையில் இருந்ததை மறைத்து சாட்சி சொல்கிறீர்கள் என்றால் இல்லை எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.